# மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 424/16 மற்றும் 421/16** **நாள். 25.08.2023**

2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயலட்சுமி | தொழில் | |
| த. பெ./க.பெ. | விஜயன் | சாதி | |
| கிராமம் | காட்டுசித்தாமூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 35 |

**ம..சா.1**

**குறுக்கு விசாரணை**

I எனக்கு எழுத, படிக்க தெரியாது. என் கணவர் பெயர் விஜயன் ஆகும். என் கணவர் பெயர் விஜி மற்றும் விஜயகுமார் என்று சொன்னால் சரியல்ல. 2016 ம் ஆண்டு 4 வது மாதம் கடலாடிகுளத்தில் விபத்து நடந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. மற்ற மனுதாரர்களும் விபத்தை நேரில் பார்க்கவில்லை. ஆறுமுகம் மகன் கோவிந்தசாமி என்பவர் விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தார். மேற்படி கோவிந்தசாமி விபத்தை நேரில் பார்க்கவில்லை. புகாரில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கு நடந்ததா என்று எனக்கு தெரியாது. என் கணவர் வெல்டர் ஆக வேலை பார்த்து வந்தார். என் கணவர் வெல்டர் வேலை செய்தததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மற்றவர்கள் சொன்னதன் அடிப்படையில் விபத்து பற்றி கூறுகிறேன்.

II. என் கணவருடன் மொத்த 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் திருவண்ணாமலையில் இருந்து செஞ்சி வந்த போது பின்னால் வந்த கரும்பு லாரி மோதிவிட்டது. கடலாடிகுளம் கூட்ரோட்டில் உள்ள மரப்பட்டறை அருகே விபத்து நடந்தது. விபத்து நடந்த இடத்தில் ரோட்டில் தடுப்பு கட்டைகள் வைத்துள்ளார்கள். அதனால் அந்த இடத்தில் வாகனங்கள் மெதுவாக செல்லும் என்றால் சரிதான். என் கணவர் விபத்து சமயத்தில் வேலைக்காக செஞ்சி வந்தார். என் கணவர் மற்றும் அவருடன் வந்தவர்கள் மது அருந்திவிட்டு வேகமாக

வந்து வாகனத்தில் இருந்து விழுந்து காயம்பட்டார்கள் என்றாலும், லாரிக்கும், விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், நஷ்டயீடு பெறுவதற்காக லாரி விபத்து ஏற்படுத்திவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. என் கணவர் வந்த வாகனத்தை போலிசார் எடுத்து சென்றார்களா என்று எனக்கு தெரியாது. லாரியை போலிசார் மோட்டார் வாகன ஆய்விற்கு எடுத்துசென்றார்களா என்று எனக்கு தெரியாது. லாரிக்கும், விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கோவிந்தசாமி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் பாண்டிசேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது இறந்துவிட்டார். இருசக்கர வாகனத்தை மணிகண்டன் என்பவர் ஓட்டி வந்தார். 3 நபர்களாக இருசக்கரவாகனத்தில் மது அருந்திவிட்டு வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

III. 3ம் மனுதாரரான என் மகள் தற்போது மேஜர் ஆகிவிட்டார் என்றால் சரிதான். என் கணவரின் தாயார் 6ம் மனுதாரர் ஆவார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. லாரி விபத்தில் சம்பந்தபடாததால் எதிர்மனுதாரர்கள் எனக்கு நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல.